## ஜெயங்கொண்டத்தில் ‘சிப்காட்’ தொழிற்பேட்டையினை விரைவில் நிறுவிடுவீர்!

# கொள்ளிடத்தில் நிரந்தர தடுப்பணை கட்ட வேண்டும்!

### சட்டப் பேரவையில் - கழக உறுப்பினர் ஜெயங்கொண்டம் க.சொ.க.கண்ணன் கோரிக்கை!

**சென்னை, ஜூலை 8 - சட்டப் பேரவையில், மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய ஜெயங்கொண்டம் தொகுதி கழக உறுப்பினர் க.சொ.க. கண்ணன், “கொள்ளிடத்தில் நிரந்தர தடுப்பணை கட்ட வேண்டும்” என்றும் - “ஜெயங்கொண்டத்தில் ‘சிப்காட்’ தொழிற்பேட்டையினை விரைந்து ஏற்படுத்துவீர்!” என்றும் கோரிக்கை விடுத்தார்.**

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், இந்த மாமன்ற முன்னாள் உறுப்பினர் எனது தந்தை க.சொ. கணேசன், பெரியவர் எஸ். சிவசுப்பிரமணியன் ஆகியோரை வணங்குகிறேன். பாசிசத்தின் கொடுமைகளை அடியோடு நீக்குவதற்கு சோசலிசப் புது உலகை படைப்பதற்கு திராவிட இனம் தழைப்பதற்கு, பிற்போக்கு சக்திகளை ஒழிப்பதற்கு மாமணியாய் தோன்றிட்ட எங்கள் தளபதியே! தமிழ்நாட்டின் தாய் நிலமே! ஏழை, எளியவர்க்கு வாழ்வு தரும் வள்ளலே! சரித்திரத்தை மாற்ற வந்த எங்கள் சரித்திரமே! தமிழினம் தழைக்க தினம் தினம் உழைக்கும் செந்தமிழே! எங்கள் திராவிட நாட்டின் முதல்வரே உங்களை வணங்குகிறேன்.

**சூறாவளியாய் சுழன்று கொண்டிருக்கிறார்!**

அது அவர்கள் கோட்டை, இது இவர்கள் கோட்டை என்று பழைய புராணங்களை பாடிக் கொண்டிராமல், டெல்லி செங்கோட்டையை அதிர வைத்து, தமிழ்நாடே திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை என்பதை நிருபித்து சூறாவளியாய் சுழன்று கொண்டிருப்பவர் அரசர்களை உருவாக்குபவர் காமராஜர் என்று சொல்வார்கள். ஆனால், இன்றைய காலகட்டத்தில் அரசர்களை ஒருவர் அதிர வைக்கிறார் என்று சொன்னால் அவர்தான் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களது மாவட்டக் கழகச் செயலாளர், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அனைத்து அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 6வது முறையாக மகத்தான வெற்றி பெற்ற நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா அவர்களுக்கும், சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதியில் 3வது முறையாக வெற்றிவாகை சூடிய அண்ணன் தொல். திருமாவளவன் அவர்களுக்கும் எனது வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை இந்த மாமன்றத்திற்கு அனுப்பிய எனது ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்களது அரியலூர் மாவட்டம் அகர வரிசையில் முதலிடத்தில் இருந்தது. ஆனால், இன்றைக்குக் கல்வியிலும் முதலிடத்திலே வருவதற்கு முத்தாய்ப்பாக விளங்கு கின்ற நம்முடைய முதல்வர் தளபதியார் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜெயங்கொண்டம் தொகுதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க சாதனைகளை இந்த 3 ஆண்டுக்காலத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள். குறிப்பாக, ஜெயங்கொண்டம் நிலக்கரித் திட்டத்திற்கு எடுக்கப்பட்ட 8,373 ஏக்கர் நிலங்களை விவசாயிகளுக்கு திரும்ப ஒப்படைத்தது. ராஜேந்திரப்பட்டினம் முதல் ஜெயங்கொண்டம்மகிமைபுரம் வரை ரூ.185 கோடியில் நான்கு வழிச்சாலை அமைத்துத் தந்தது. ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டடம் ரூ.16.40 கோடியில் கட்டித் தந்தது. ஜெயங்கொண்டத்திற்கு புதிய மின் செயற்பொறியாளர் அலுவலகம் பிரித்து வழங்கியது.

மாமன்னன் இராஜேந்திர சோழன் பிறந்த நாள் ஆடி திருவாதிரை நாளை அரசு விழாவாகக் அறிவித்தது. ஜெயங்கொண்டம் நகராட்சியை முதல் நிலை நகராட்சியைத் தரமுயர்த்தியது. இந்த 3 ஆண்டுகளில் இதுவரை 18 புதிய நியாய விலைக் கடைகளை மக்களுக்கு எளிதாக பொருட்கள் இன்றைக்கு வாங்குவதற்கு பிரித்து வழங்கியி ருக்கிறார்கள். அனைத்துத் துறைகளிலும் இன்றைக்கு மிகச் சிறப்பாக பல்வேறு திட்டங்கள் சிறப்பாக என்னுடைய தொகுதியிலே செயல்படுத்தப்படுகிறது. அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எரிசக்தித் துறையிலே முக்கியமான கோரிக்கைகள் நிலுவையில் இருப்பதை உடனடியாகச் செய்துதரக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ஜெயங்கொண்டம் தொகுதிக்கு அறிவிக்கப்பட்ட மின் கோட்டத்தை தனியாகப் பிரித்து இயங்குவதற்கு உடனடியாக அனுமதி வழங்கிடக் கேட்டுக் கொள்கிறேன். ஜெயங்கொண்டத்தில் சிப்காட் துவங்கப்பட உள்ள நிலையில் அங்கே ஏற்கெனவே 4 எண்ணிக்கையில் 110 KV துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. அது போதாது. அதனால் 230 KV புதிய துணை மின் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜெயங்கொண்டம் நகருக்கு ஒருவழி மின்சாரம்தான் வருகிறது. ஏற்கெனவே சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தில் நான் பேசி மாற்று மின்சாரம் கொண்டு வருவதற்கு மின் நீட்டிப்பு வழங்குவதற்கு அரசுக்கு ஏற்கெனவே estimate போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு உடனடியாக ரூ.1,796 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கக் கேட்டுக் கொள்கிறேன்.



டெல்டா பகுதி விவசாயிகளுக்கு உடனடியாக மின்சாரம் வழங்குவதற்கு இலக்கீடும், ஒதுக்கீடும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்கிறேன். ஜெயங்கொண்டம் தொகுதியில் குறைந்த மின்னழுத்தம் நிலவுவதால், சிலால் மற்றும் குமிளங்குழி ஆகிய 2 இடங்களில் புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அதற்குத் தேவையான 1,177 இலட்சம் ரூபாய் நிதியை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, மீன்சுருட்டி, தா.பழூர், ஜெயங்கொண்டம் பகுதிகளில் அதிகமாக இருப்பதால், சிலால் கிராமத்தை மையமாக வைத்து, புதிய பிரிவு அலுவலகம் துவங்கக் கேட்டுக்கொள்கிறேன். ஆண்டிமடம் ஒன்றியம், பெரிய கிருஷ்ணாபுரம், திருக்களப்பூர் மற்றும் கோவில்வாழ்க்கை ஆகிய பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை துணை மின் நிலையம். அரசு வழங்கத் தயாராக இருக்கின்ற நிலையில், அங்கே இடம் இல்லாத காரணத்தினால், புறம்போக்கு இடம் இல்லாத காரணத்தினால், அந்த பெரிய கிருஷ்ணாபுரம் கிராமத்தில் மயான புறம்போக்கில் உபரியாக உள்ள 4 ஏக்கர் நிலத்தை மின்சார வாரியத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, அரியலூர் மாவட்டம், செந்துறை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில், குறைந்த மின் அழுத்தம் நிலவுவதால் அங்குள்ள 33 KV துணை மின் நிலையத்தை 110 KV துணை மின் நிலையமாக தரமுயர்த்தித் தரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் முதலமைச்சர் அவர்கள் சிறப்பான திட்டங்களை முன்னெடுத்திருக்கிறார்கள். குறிப்பாக, இந்த சட்டப் பேரவையில் நான் இரண்டு முறை பேசிய அடிப்படையிலே, தொழிற்சாலைகள் வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். அதை நிறைவேற்றும்விதமாக, முதலமைச்சர் அவர்கள் சிப்காட் தொழிற்சாலை அமைப்பதற்கு பூர்வாங்க பணிகளைத் தொடங்கியுள்ளார்கள். அப்பணியை இந்த ஆண்டே விரைந்து செயல்படுத்துவதற்கு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, முதலமைச்சர் அவர்கள் 2811 2022 அன்று எங்களுடைய ஜெயங்கொண்டம், கங்கைகொண்ட சோழபுரம் - மாளிகைமேடுக்கு வருகை தந்து, அகழ்வாராய்ச்சிப் பணிகளைப் பார்வையிட்டு, அதற்கு அருங்காட்சியகம் கட்டுவதற்கு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்குவோம் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால், இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் அவர்களும் 20 கோடி ரூபாயில் அருங்காட்சியகம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோன்று, தா.பழூரில் தொழிற்பயிற்சி நிலையம் அமைப்பதற்கு, முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகின்றன. அதையும் இந்த ஆண்டே செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தங்கத்தின் மதிப்பும், செல்வாக்கும் தொடர்ந்து கூடிக்கொண்டே இருக்கிறது. அதனால்தான் என்னவோ தெரியவில்லை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கு இன்றைக்கு நிதித் துறையை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டு கால ஆட்சியிலே, கஜானாவை காலி செய்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். அந்த நிலையில்கூட, இன்றைக்கு நிதி நிலைமையை சீர்செய்து, பல சிறப்பான திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்களும், நம்முடைய அமைச்சர் அவர்களும் இன்றைக்குச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, தமிழ் புதல்வன் திட்டம். ஏறத்தாழ 360 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுகின்ற வகையில் சிறப்பாக செயல்படுத்தப்படுகிறது. அதேபோன்று, 5 இலட்சம் ஏழை குடும்பங்களை வறுமையிலிருந்து மீட்டெடுக்க, 27,922 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அதேபோன்று, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் 8 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டுவதற்கு, முதற்கட்டமாக 1 இலட்சம் வீடுகளைக் கட்டுவதற்கு 3500 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கின்றார்கள். அதேபோன்று, 45 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளைத் தரமுயர்த்துவதற்கு 3,014 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். கடலோர வளங்களை மீட்பதற்காக 1,675 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். பழங்குடியினர் நலன் மற்றும் வாழ்வாதாரத்தை மேம்படுத்த 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.

**2 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்!**

எரிசக்தித் துறையிலே இன்றைக்கு மிகப் பெரிய புரட்சி என்று சொன்னால், கடந்த 10 ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் செய்யாததை, மூன்றே ஆண்டுகளில் 2 இலட்சம் விவசாயிகளுக்கு இன்றைக்கு இலவச மின்சாரத்தை வழங்கிய அரசு, நம்முடைய திராவிட மாடல் அரசு. அது, முதல்வர் அவர்களுடைய மிகச் சிறப்பான திட்டம். அதேபோன்று, மின்சாரத் துறையில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, பல சிறப்பான திட்டங்களை முன்னெடுத்திருக்கிறார்கள். மாநிலத்தின் நிறுவுதிறனை அதிகரிக்கும் வகையில், 5 எண்ணிக்கையிலான அனல்மின் திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். நிலக்கரியைக் கையாள்வதற்கு பல சிறப்பான திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 2021 ஆம் ஆண்டில் 54 துணை மின் நிலையங்கள். அதேபோன்று, தற்போது 363 எண்ணிக்கையிலான மின் மாற்றிகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. உயர் அழுத்த மின் பாதைகள் நிறுவப்பட்டுள்ளன. அதேபோன்று, 17 துணை மின் நிலையங்கள், 2,942 MV திறனுடன் மின் கட்டமைப்பில் உயர்த்தப்பட்டிருக்கின்றன. அதேபோன்று 3 புதிய மண்டலங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. என்னுடைய ஜெயங்கொண்டம் தொகுதி உட்பட, 11 புதிய கோட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், 45 எண்ணிக்கையிலான புதிய 33/11 kV துணை மின் நிலையங்கள் நிறுவப்பட்டு, மக்களுடைய பயன்பாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளன. இப்படி பல சிறப்பான திட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுத்திருக்கிறது.

இந்த மானியக் கோரிக்கை தொடர்பான கோரிக்கைகள். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்கியவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். தற்போது அவர்களுக்கு ஓய்வூதியம் ரூ.30,000/- வழங்கப்படுகிறது. பலர் சிரமத்தில் இருக்கின்ற காரணத்தினால், ஓய்வூதியத்தை 50,000/- ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, முன்னாள் சட்டமன்ற மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு மருத்துவப்படி ஆண்டுக்கு ரூ.70,000/- வழங்கப்படுகிறது. அதை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு ஊழியர்களின் மருத்துவ செலவினத்தை தாமதமின்றி விரைந்து மீளபெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நிறைய உறுப்பினர்கள் பேசினார்கள்; சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பொறுத்தவரையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அந்த நிதியை வழங்கியதால்தான் நாங்களெல்லாம் நிம்மதியாக தொகுதிக்குச் செல்ல முடிகிறது. அதேபோன்று, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் விதி 110ன்கீழ் முதலமைச்சர் கிராமச் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு 4,000 கோடி ரூபாய் நிதியொதுக்கியிருக்கிறார்கள். அந்த நிதியின்மூலம் முக்கிய கிராமச் சாலைகளையெல்லாம் அமைத்துவிடுவார்கள். ஆனால், சிறிய, சிறிய தெரு சாலைகளையெல்லாம் அமைப்பதற்கு ஊராட்சி மன்றத் தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்களுக்கு போதிய நிதியில்லை. இப்போது எங்கே சென்றாலும், MLA தொகுதி மேம்பாட்டு நிதியில், நீங்கள் என்ன செய்தீர்கள் என்றுதான் கேட்கிறார்கள். அதனால், தயவு செய்து, நீங்கள் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.3 கோடி என்பதை, 5 கோடி ரூபாயாக உயர்த்தித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களுடைய நீண்ட நாள் கோரிக்கையான அரியலூர்தஞ்சாவூர் மாவட்டங்களை இணைக்கின்ற கொள்ளிடத்திலே தடுப்பணை கட்டி விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். ஜெயங்கொண்டம் மகிமைபுரத்திலிருந்து மதனத்தூர்வரை உள்ள சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில், அவசரகதியில், கடைசி நேரத்தில் ஆண்டிமடம் தாலுகா அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு டெண்டர் விட்டார்கள். போதிய நிதி ஒதுக்கீடு செய்யவில்லை. அதனால், மூன்று ஆண்டுகளாகியும் இன்னும் அந்தக் கட்டடப் பணி நிறைவடையாமல் இருக்கிறது. எனவே, அதற்குத் தேவையான கூடுதல் நிதியை ஒதுக்கீடு செய்து, அந்தக் கட்டடத்தை விரைவாக... அமைச்சர் அவர்களைப் பார்த்து, கடிதம் கொடுத்துவிட்டேன். அது pendingல் இருக்கிறது.

அதேபோல, இன்னொரு முக்கியமான கோரிக்கை குறித்து ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருக்கிறேன். ஜெயங்கொண்டம் ஒன்றியம், கல்லாத்தூரிலிருந்து மீன்சுருட்டி செல்லும் சாலை. . .

அந்த சாலை 16. கி.மீ. தூரம் இருக்கிறது. அந்தச் சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்ற வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மீதமிருக்கிற என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை தங்களிடத்தில் கொடுக்கிறேன். அவற்றை நான் இங்கே படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**நாற்பதிலும் நாம் வெற்றி பெற்றுள்ளோம்!**

‘அறியாமை வெட்கப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால் அறிந்து கொள்ள விருப்பமில்லாமை அதைவிடப் பெரிய வெட்கக்கேடாகும்’ என்று பென்ஜமின் ஃப்ராங்க்ளின் சொல்லியிருக்கிறார். அறியாதவர்களுக்கு இருப்பது அறியாமை. அது வெட்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால், அறிந்துகொள்ள விருப்பமில்லாமல் இருப்பது சிலருக்கு வெட்கக்கேடு. ஏனென்றால், இந்த சபையில் உட்கார்ந்து விவாதிக்க தைரியமில்லாதவர்கள் இன்றைக்கு ஓடிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு நாற்பதிலும் நாம் வெற்றிபெற்றிருக்கிறோம். வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் இலக்கு 200. 200 இடங்களில் நிச்சயமாக வெற்றி நிச்சயம். (மணியடிக்கப்பெற்றது) மக்களின் தேர்வு இனி என்றைக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் தான் என்பதைச் சொல்லி, (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு இந்த அவையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றிகூறி அமைகிறேன்.

**தொகுதிக் கோரிக்கைகள்:**

வரதராஜன்பேட்டை பேரூராட்சி மற்றும் இலையூர் ஊராட்சியில் புதிய கால்நடை மருந்தகம் அமைத்துத் தர வேண்டும்.

இலையூர் அரசு உயர்நிலைப் பள்ளி அறநிலையத் துறை இடத்தில் இயங்குவதால் புதிய கட்டடம் கட்ட இயலாத நிலை உள்ளது. எனவே, அறநிலையத் துறையிடம் இருந்து இடத்தினை பள்ளிக்கு மாற்றி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உடையார்பாளையம் பேரூராட்சியில் மின்சார சுடுகாடு அமைத்துத் தர வேண்டும்.

ஜெயங்கொண்டம் நகராட்சி, உடையார்பாளையம் பேரூராட்சி மற்றும் தா.பழூர், ஆண்டிமடம் ஊரகப் பகுதிகளில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித்தர வேண்டும்.

ஜெயங்கொண்டம் தொகுதியில் பல்வேறு கிராமங்களில் உள்ள பழுதடைந்த நியாய விலைக் கடைகள் மற்றும் அங்கன்வாடிகளுக்கு புதிய கட்டடம் கட்டித்தர வேண்டும்.

ஜெயங்கொண்டம் தொகுதியில் பல கிராமங்களில் பழுதடைந்த மற்றும் இடிக்கப்பட்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளைக் கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜெயங்கொண்டம் அரசு கலைக் கல்லூரிக்கு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) விடுதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

கங்கைகொண்ட சோழபுரம் மாளிகைமேட்டில் அகழாய்வு பணி நடைபெறும் இடத்தில் நிரந்தர மேற்கூரை அமைத்துத் தர வேண்டும்.

இவ்வாறு க.சொ.க.கண்ணன் பேசினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பொள்ளாச்சி எஸ். ராஜு

**ஜூலை 8 (2014)**



தனது இளமை காலந்தொட்டே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பொள்ளாச்சி பகுதியில் பணியாற்றியவர்

1972ஆம் ஆண்டு முதல் 2007 ஆண்டு வரை தொடர்ந்து பொள்ளாச்சி நகரச் செயலாளராகவும் பின்னர், தலைமைச் செயற்குழு உறுப்பினராக பொறுப்பு வகித்தவர்.

கழகத்திற்கு சோதனை ஏற்பட்டபோது கொங்கு மண்டலத்தில் கழகத்தை வளர்த்திட பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

பொள்ளாச்சி நகர்மன்ற உறுப்பினராகவும் – நகர்மன்றத் தலைவராகவும் பொறுப்பு வகித்ததுடன், 1996ஆம் ஆண்டு பொள்ளாச்சி சட்டமன்றத் தொகுதி கழக உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

1959ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ்.வி. சக்கரை மைதீன்

**ஜூலை 8 (1987)**



தனது இளமை காலந்தொட்டே தந்தை பெரியாரின் கொள்கையை ஏற்று திராவிடர் கழகத்தின் பகுத்தறிவு கொள்கையை பரப்பி வந்த இவர், கழகம் துவங்கியபோதே அதில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

பட்டிதொட்டியெங்கும் கழகக் கொள்கைகளை பிரச்சாரம் செய்த இவர், ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தின் வட்டச் செயலாளராக பணியாற்றினார்.

இவரது கழகப் பணியினை போற்றும் வண்ணம் கோவையில் நடைபெற்ற மாநாட்டு அரங்கிற்கு இவரது பெயர் வைக்கப்பட்டது.

இந்தி திணிப்பு எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**